## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# அருள் மொழிகள்



பரமாத்மாவாகிய பகவானுடைய மஹிமை அஸாதாரணமானது. அவரை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. ஆனால் நம் சக்திக்கேற்ப அந்த பரமாத்மாவை பூஜித்து நமது வாழ்க்கையை மேன்மையாக்க வேண்டும். நம் முன்னோர்கள் பரமாத்மாவை அனேக நாமங்களால் துதித்து நற்பயன் அடைந்தார்கள். இவைகளில் ஸஹஸ்ரநாமங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. ஸஹஸ்ரநாமங்களுக்ள் லலிதா ஸஹஸ்ரநாமம் விசேஷமானது.

லலிதா ஸஹஸ்ரநாமம் வேதாந்த தத்வங்களை மொழிந்து பரமாத்மாவின் நற்குணங்களுடன் கூடிய உருவத்தை (ஸகுண ரூபத்தை)யும் துதிக்கும் முறைகளையும் மற்றும் பரதேவதை எவ்வாறு ஜனங்களுக்கு அனுக்கிரஹம் புரிகிறாள் என்பதையும் வர்ணிக்கிறது. குறிப்பாக ஸ்ரீ சங்கரர் உபதேசம் செய்த அத்வைத சித்தாந்தம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அனேக இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. மித்யாஜகத் அதிஷ்டானா த்வைதவர்ஜிதா, தத்வ மர்த்தஸ்வரூபிணி என்ற நாமாக்கள் அத்வைத ஸித்தாந்தங்களை வெளிப்படுத்துகின்றன. நாமபாராயணப்ரீதா என்ற நாமா நாம் அவளுடைய அனுக்ரஹத்தை பெறுவதற்கு அவளுடைய நாமாக்களை பாடவேண்டும், என்று காண்பிக்கிறது.

ஸத்யப்ரஸாதினி என்ற நாமா நிஷ்டையுடன் அவளைப் பூஜித்தால் நாம் வேண்டுவதை வேகமாக பெறமுடியும் என்று சொல்கிறது. அதே மாதிரி நிர்வாண ஸுகதாயினி என்ற நாமாவுக்கு மோக்ஷம் அடைவதற்காக அவளுடைய நாமாக்களை ஜபிக்கிறவர்களின் விருப்பமும் நிறைவேறக்கூடியது என்பது பொருள். கல்பவிருக்ஷம் போன்று அவர்களுடைய ஆசைகளை பூர்த்தி செய்யும் லலிதா ஸஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்து எல்லா பக்தர்களும் தங்களுக்கு வேண்டிய நன்மை அடைந்து கொள்வார்களாக

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

गन्धेन गावः पश्यन्ति बेदैः पश्यन्ति ब्राम्हणाः ।
चारैः पश्यन्ति राजानः चक्षुर्भ्यामितरे जनाः ॥७४॥



க³ந்தே⁴ன கா³வ: பஶ்யந்தி பே³தை³: பஶ்யந்தி ப்³ராம்ஹணா: |
சாரை: பஶ்யந்தி ராஜான: சக்ஷுர்ப்⁴யாமிதரே ஜனா: ||74||

வஸ்துக்களை பசுக்கள் வாசனையால் அறிகின்றன (பார்க்கின்றன), பிராமணர்கள் வேதங்களால் இவ்வுலகம் அவ்வுலகம் யாவற்றையும் பார்க்கின்றனர், அரசர்கள் கண் ணுக்குத் தெரியாத பொருள்களை சாரர்களால் பார்க்கின்றனர், மற்ற மனிதர்கள் கண்களால் பொருள்களை பார்க்கின்றனர்.

पर्जन्यनाथाः पशवः राजानो मन्त्रिवान्धवाः ।
पतयो बान्धवाः स्त्राणां ब्राम्हणा वेदबान्धवाः ॥ ७५ ॥

பர்ஜன்யநாதா²: பஶவ: ராஜானோ மந்த்ரிவாந்த⁴வா: |
பதயோ பா³ந்த⁴வா: ஸ்த்ராணாம்' ப்³ராம்ஹணா வேத³பா³ந்த⁴வா: ||75||

பசுக்கள் மழையை நாதனாக உடையவைகள், அரசர்கள் மந்திரிகளை பந்துக்களாக கொண்டவர்கள், ஸ்திரீகளுக்கு அவர்களுடைய கணவர்களும், பிராமணர்களுக்கு வேதங்களே பந்துக்களாக இருக்கிறார்கள்.

सत्येन रक्ष्यते धर्मः विद्या योगेन रक्ष्यते ।
मृजया ग्क्ष्यते रूपं कुलं वृत्तेन रक्ष्यते ॥ ७६ ॥

ஸத்யேன ரக்ஷ்யதே த⁴ர்ம: வித்³யா யோகே³ன ரக்ஷ்யதே |
ம்ரு'ஜயா க்³க்ஷ்யதே ரூபம்' குலம்' வ்ரு'த்தேன ரக்ஷ்யதே ||76||

தர்மம் ஸத்யத்தால் காக்கப்படுகிறது, கல்வி, அப்யாஸத்தால் (திரும்ப திரும்ப படிப்பதால்) ரக்ஷிக்கப்படுகிறது, அழகு சுத்தம் செய்வதால் (அழுக்கைப் போக்குவதால்) ரக்ஷிக்கப்படுகிறது, குலம் நன்னடத்தையால் காக்கப் படுகிறது என்பதே உண்மை .

(தொடரும்….)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## 11. இறைவனின் தரிசனம் எப்போது கிடைக்கும்?

**ந மே த்வேஷ்யோ5ஸ்தி ந ப்ரிய:**




"எனக்கு விருப்புமில்லை, வெறுப்புமில்லை" என்பது பகவானே உணர்த்தியது. ஆகவே, நாம் மிகுந்த பக்தியுடன் இறைவனை வழிபட்டு சிரேயஸ்ஸை அடைய வேண்டும்.

நான் இந்தக் கருத்துக்களை எதற்குக் கூறினேன் என்றால், "ஒருவனுக்குத் தானே தனக்கு மிகவும் பிரியமான வஸ்து" என்று முதலில் பார்த்தோம். இதனால் ஒருவன் தனக்குப் பரம சுகம் வர வேண்டுமென்று விரும்புகிறான். பரம சுகம் வேண்டுபவன் உலக விஷயங்களின் மூலம் சுகம் கிடைக்கும் என எண்ணக் கூடாது. அது இறைவனின் அருளால் தான் கிடைக்கும். ஆகவே, ஒருவன் மிகுந்த பக்தியுடன் பகவானை ஆராதித்து அவனது அருளைப் பெற வேண்டும். இதுதான் நான் பேச எடுத்துக் கொண்ட விஷயம்.

இறைவனை நினைப்பது பற்றி பீஷ்மர் யுதிஷ்டிரரிடம்,

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

**ஏஷ மே ஸர்வதர்மாணாம் தர்மோSதிகதமோ மத: |**
**யத்பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைரர்சேன்னர:ஸதா ||**

என்கிறார். அதாவது எல்லா தர்மங்களைக் காட்டிலும் பெரிய தர்மம் இறைவனை பக்தியுடன் ஆராதிப்பதுதான். இதில் "பக்தியுடன்" என்று பீஷ்மர் கூறியிருப்பது முக்கியம் வாய்ந்தது. நாம் செய்யும் பூஜையோ, ஜபமோ மற்றவர்கள் பார்ப்பதற்கு அல்ல. நாம் செய்யும் நல்ல காரியம் விளம்பரத்தை எதிர்பார்த்துச் செய்யப்படக்கூடாது. நாம் செய்வது இறைவனுக்குத் தெரியும். மற்றவர்களுக்குத் தெரிவதற்காக அல்ல என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

சிலர் பூஜை செய்யும் போது சொல்லப்படும் ஸங்கல்பத்தில் தங்கள் விருப்பங்களையெல்லாம் அடைவதற்காக நிறைய சொற்களைச் சேர்த்துச் சொல்வார்கள்

**க்ஷேமஸ்தைர்யவீர்யவிஜய-ஆயுராரோக்ய-ஐச்வர்யாபிவ்ருத்த்யர்த்தம்**

இது தேவையா? நமக்கு என்ன வேண்டும் என்று இறைவனுக்குத் தெரியாதா? அவன் ஸர்வக்ஞன் என்றுதானே நாமெல்லோரும் நம்பிக்கொண்டிருக்கிறோம்? ஆகவே,

**ஸ்ரீ பரமேச்வரப்ரீத்யர்த்தம்**

என்று மட்டும் சொன்னால் போதாதா? ஆனால், ஜனங்களுக்கு இது போதாது என்று தோன்றுகிறது. இன்னும் ஏதாவது ஸங்கல்பம் இருந்தால் சொல்லுங்கள் என்று அவர்கள் தங்கள் புரோஹிதரைத் தொந்தரவு செய்வார்கள். ஆனால், ஸர்வக்ஞன் ஸர்வசக்தனான பகவானுக்கு நாம் எதுவும் சொல்லத் தேவையில்லை; அவனுக்கே எல்லாம் தெரியும். அவன் திருப்தியடைந்தான் என்றால் இனி நமக்கு ஆக வேண்டியது எதுவுமே இல்லை.

குசேலன் பகவானுடைய சன்னிதிக்குச் சென்ற போது தனக்கு “இது வேண்டும், அது வேண்டும்” என்றெல்லாம் சொல்லவே இல்லை. ஒரு பிடி அவலை பகவானிடம் கொடுத்தான். “இதனால் கிருஷ்ண பரமாத்மாவிற்கு சந்தோஷமாகட்டும்” என்ற ஒரே எண்ணத்துடன் கொடுத்தான். பகவான் அதை அப்படியே வாயில் போட்டுக் கொண்டார். “தனக்குத் திருப்தியாய்விட்டது” என்றார் பகவான். அதே சமயத்தில் குசேலன் குபேரனாகிவிட்டான். ஸர்வக்ஞனான பகவானிடம் நாம் ஒன்றும் கேட்க வேண்டியதில்லை என்பதற்கு இது ஒன்று மட்டும் போதாதா? (தொடரும் .....)


ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கல்வியறிவும் ஆன்மிக நெறியும்

"... அப்பொழுது நான் ஸம்ஸ்க்ருதம் அறிந்திருந்தாலும், இறைவனின் அருளினாலேயே உபநிஷத் வாக்கியங்களின் உட்கருத்தும் அவை உணர்த்துபவையும் எனக்குச் சரியாகப் புரிந்தன. ஆசார்யாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) எனக்கு தைத்திரீய உபநிஷத் பாஷ்யம் கற்பிக்கும் போது தான், நான் முன்னர் புரிந்து கொண்டதற்கும் பாஷ்யத்திற்கும் எந்த முரண்பாடும் இல்லை, என்பதை அறிந்தேன்"



என்று கூறியுள்ளார். அதே போல், "த்ருக் த்ருச்ய விவேகம்", "ஸரஸ்வதி ரஹஸ்ய உபநிஷத்" முதலிய நூல்களில் கூறப்படும் ஸமாதிப் பயிற்சியை ஆசார்யாள் அந்நூல்களைப் படிக்கும் முன்னரே செய்திருந்தார். இதைப் பற்றி அவரே,

... (இந்த ஸமாதி பற்றிய) சுலோகங்களை ஸரஸ்வதி ரஹஸ்ய உபநிஷத்திலும், த்ருக்-த்ருச்ய விவேகத்திலும் பல காலம் கழித்தே படித்தேன். அப்படிப் படிக்கும் போது தான், ஸவிகல்ப ஸமாதியில் இத்தனை வகைகள் உள்ளன என்பதையும் அவை எல்லாவற்றையும் நான் முறையாகப் பயிற்சி செய்திருந்தேன் என்பதையும் அறிந்தேன்" என்று கூறியுள்ளார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆன்மிக நெறியில் செல்பவர்களுக்குப் பாடம் சொல்வதில் ஆசார்யாள் மிகவும் ஊக்கம் கொண்டிருந்தார். அவர்களுக்குப் பாடம் சொல்லும் போது தர்க்க வாதங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரமாட்டார். அந்த வகுப்புகளில் வேதாந்த மதத்தின் ஸித்தாந்தத்தைக் கற்பிப்பதே அவரது முக்கிய நோக்கமாக இருக்கும் என்று ஆசார்யாளின் சிஷ்யர் ஸ்ரீ வேங்கடஸுப்பா ராவ் தமது அனுபவமாகப் பதிவு செய்துள்ளார்:

"... ஆசார்யாளிடம் சம்பிரதாயமான முறையில் வேதாந்த பாடம் கேட்க வேண்டும் என்ற அவா ஒரு முறை என்னுள் எழுந்தது. நான் சிருங்கேரி சென்று என்னுடைய இந்த ஆசையை ஆசார்யாளிடம் தெரிவித்தேன். ஆசார்யாளும் உடனடியாகச் சம்மதித்து பிற்பகல் மூன்று மணிக்குப் பாடம் துவங்கும் என்று கூறினார். வகுப்பில் என்னுடன் சில ஸந்யாஸிகளும், சில பண்டிதர்களும் சகமாணவர்களாக இருந்தனர். ஆசார்யாள், சங்கர பகவத்பாதர் இயற்றிய "ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்" என்ற நூலைப் பாடம் சொல்லத் துவங்கினார். முதல் சுலோகத்திற்கு அன்று மிகத் தெளிவாக விளக்கம் அளித்து, இரண்டாவது சுலோகத்தை அடுத்த நாள் கற்பிப்பதாகக் கூறினார். மறு நாள், அவருடைய தொண்டை கட்டியிருந்தது. அப்படி இருந்தாலும், 'நீ இதற்காக பெங்களூரிலிருந்து வந்திருக்கிறாய். அதனால், கட்டாயம் பாடம் சொல்லுவேன்' என்று பாடத்தைத் துவக்கினார். வகுப்பு நடக்கும் போது, ஒரு முதிய ஸந்யாஸி தர்க்க சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சில கேள்விகளை எழுப்பினார். அதற்கு ஆசார்யாள், 'இந்த வகுப்பை வேங்கடஸுப்பாராவிற்காக நடத்துகிறேன். எனவே, அவருக்கு எது பலன் தருமோ அதை மட்டும் பாடம் சொல்கிறேன். தர்க்கம் அவருக்கு முக்கியம் இல்லை. தர்க்க சாஸ்திரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பாடம் கேட்க உங்களுக்கு விருப்பமானால் இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பல விதமான பதில்கள் கூறிப் பல நாட்களுக்குப் பாடம் சொல்லலாம்' என்று கூறிவிட்டார். மூன்றாம் நாளன்று, ஆசார்யாள் என்னிடம், "உனக்கு இது போதும். இன்னும் சொல்லப் போனால், முதல் நாள் சொன்னதே உனக்குப் போதுமானது. ஆனால் 'இரண்டாம் நாள் பாடம் தடைபடுவது நல்ல அறிகுறியல்ல' என்ற எண்ணம் உனக்கு வரக்கூடாதே என்பதற்காக நேற்று பாடம் சொன்னேன்' என்று கூறினார்."

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 6

### உஷஸ்தி உபாக்யானம்

**यदेव विद्यया करोति श्रद्धया उपनिषदा तदेव वीर्यवतरं भवति ।**

**யதே3வ வித்3யயா கரோதி ஶ்ரத்3த4யா உபநிஷதா3 ததே3வ வீர்யவதரம்' ப4வதி |**

என்ற இடத்தில் சிரத்தையையும் சொல்லியிருப்பதால் சிரத்தைக் குறைவினால் கர்மத்தை விட்டு விடலாமென்று ஏற்படாது. சிரத்தையிருந்தால் விசேஷபலன்; இல்லாமல் போனால் ஸாமன்யபலன் என்று மாத்திரம் தாத்பர்யம்.

(3) மேலும் ஒரு நல்ல வித்வான் கிடைத்திருக்கும்போது அவர் பெரியவர் என்று மரியாதை மாத்திரம் செய்து அனுப்பிவிடுவது உசிதமில்லை; நாம் அவர் கிடைத்ததின் பிரயோஜனம் அவரிடமிருந்து வித்யையை கிரஹிக்க வேண்டியதே என்ற விஷயத்தை இச்சரித்திரத்தில் ரித்விக்குகள் காட்டியிருக்கிறார்கள். நமக்குத் தெரியாத விஷயத்தைத் தெரியாதென்றே ஒப்புக்கொண்டு தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். உனக்குத் தெரியுமா? என்று இந்த பிராஹ்மணர் நம்மைப் பார்த்து கேட்கலாச்சாவென்று அவரை உதாஸீனம் செய்து கர்மத்தை மேல் நடத்தியிருந்தால் தலை வெடித்திருக்கும். அவ்விதம் செய்யாமல் விநயத்துடன் உஷஸ்தியை பிரச்னம் செய்து வித்யையைத் தெரிந்து கொண்டு பிறகு பாக்கி யாகத்தை நடத்தினார்கள். இந்த உபசாந்தியே வித்யாகிரஹணத்திற்கு முக்கியமான அதிகார ஸம்பத்து.


இவ்விதமாக இன்னும் இக்கதையில் ஒவ்வொருவருடைய செய்கையும் கவனித்துப் பார்த்தால் எத்தனையோ தர்மங்கள் வெளியாகின்றன. இவ்விதமாக லக்ஷக்கணக்கான உபாக்யானங்கள் வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொண்டு அதனால் போதிக்கப்படும் உபதேசங்களை கிரஹித்து நேர் தர்ம மார்க்கத்தில் வழிநடக்கும்படி ஜனங்களுக்கு ஆஸ்திக்ய புத்தியைக் கொடுத்து ஈசுவரனே ரக்ஷிப்பாராக !

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

### அத்யாயம் - 7

### பலன் கொடுப்பது கடவுளே



பூர்வ மீமாம்ஸையில் கர்மாவே ஸ்வதந்திரமாக பலன் கொடுக்க வல்லமையுள்ளதென்று யுக்தியினால் ஸாதித்து, ஆனால் செய்யும் கர்மா பிரத்யக்ஷமாக உடனே நசித்து விடுவதினால் பலன் ஏற்படும் வரையில் அக்கர்மாவின் கார்யமாக அபூர்வம் என்று ஒன்று உண்டாகிறதென்று கல்பித்துக்கொண்டு சிரமப்படுகிறார்கள். ஸ்ரீ சங்கர விஜயத்தில் ஆசார்யாளுக்கும் மண்டனமிசிரருக்கும் நடந்த ஸம்வாதத்தில் தனக்கு அபஜயம் ஏற்பட்டும்கூட, வாஸ்தவமான தத்வம் ஆசார்யாள் சொல்வது போல் இருந்தால் ஜைமினி ஆசார்யார் எப்படி கர்ம ப்ராபல்யத்தை ஸித்தாந்தம் செய்தார் என்ற ஸந்தேஹம் நிவிருத்தியாகாமலிருந்ததைக் கண்டு ஜைமினி மஹர்ஷியே நேரில் வந்து, தனக்கும் தன் குருவும் உத்தர மீமாம்ஸாசார்யாளுமான வியாஸ பகவானுக்கும் அபிப்பிராய பேதம் ஒரு நாளும் இருக்கக் காரணமில்லையென்றும், எல்லாம் ஈசுவராயத்தம் என்று போலி வேதாந்தம் சொல்லிக்கொண்டு கர்மத்தில் சிரத்தையில்லாமல் போகக் கூடாதென்பதை உத்தேசித்துத்தான் அவ்விதம் ஸித்தாந்தம் செய்ததாகவும் சொன்னதாகத் தெரிகிறது. ஸர்வ சாஸ்திர பாரங்கதரான மண்டனமிசிரருக்கே இது மாதிரி ஸந்தேஹம் வரவேண்டுமானால் நமக்கெல்லாம் ஏற்படுவதில் என்ன ஆச்சர்யம்?

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

विष्ण्वर्धत्वात्पालकत्वं ममास्ते संहर्तृत्वं नैजमेवास्ति किंतु ।
स्रष्टुर्भावो वाणि नास्तीति मत्वा तत्प्राप्त्यै त्वां सेवते पञ्चवक्त्रः ॥४९॥

விஷ்ண்வர்த⁴த்வாத்பாலகத்வம்’ மமாஸ்தே ஸம்’ஹர்த்ரு’த்வம்’ நைஜமேவாஸ்தி கிந்து ।
ஸ்ரஷ்டுர்பா⁴வோ வாணி நாஸ்தீதி மத்வா தத்ப்ராப்த்யை த்வாம்’ ஸேவதே பஞ்சவக்த்ர꞉ ||49||



வாணி ! ஐந்து முகங்கள் கொண்ட சிவன் "விஷ்ணுவின் பாதியானதால் (சங்கரநாராயணனானதால்) என்னிடம் பாலன அதிகாரம் உள்ளது. ஸம்ஹாரத் தகுதி என் அதிகாரமாகவே உள்ளது. ஸ்ருஷ்டி செய்பவன் என்ற நிலை என்னிடமில்லையே" என ஏங்கி அதனைப்பெற உன்னை பஞ்சவக்திரனாக (சிங்கமாக) வழிபடுகிறான் (இதிலும் பஞ்சமுகம் என்ற சிலேடைச்சொல்).

तवाम्बराभावशशीयशृङ्ग-नीकाशमध्यत्वमयं निशम्य ।
वलग्नकार्श्याध्ययनाय किंवा पदाब्जसेवां विदधाति सिंह : ॥५०॥

தவாம்ப³ராபா⁴வஶஶீயஶ்ரு’ங்க³-நீகாஶமத்⁴யத்வமயம்’ நிஶம்ய ।
வலக்³னகார்ஶ்யாத்⁴யயனாய கிம்’வா பதா³ப்³ஜஸேவாம்’ வித³தா⁴தி ஸிம்’ஹ : ||50||

ஆடையின்மையையும் உன் இடுப்பு முயல் கொம்பு போன்றது என்ற நிலையையுமறிந்த சிங்கம், இடுப்பு மெலிய வழிகற்க, உன் திருவடிசேவை செய்கிறதோ?

नताय पादाम्बुजयोर्जनाय राजाधिराजत्वविधित्सया किम् ।

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

सिंहासनं त्वं वद दातुमम्ब सिंहं सदा सन्निधिगं करोषि ॥५१॥

நதாய பாதா3ம்பு3ஜயோர்ஜனாய ராஜாதி4ராஜத்வவிதி4த்ஸயா கிம் |
ஸிம்'ஹாஸனம்' த்வம்' வத3 தா3துமம்ப3 ஸிம்'ஹம்' ஸதா3 ஸந்நிதி4க3ம்' கரோஷி ||51||

தாயே! உன் சரணகமலங்களில் வணங்கியவனுக்கு ராஜாதிராஜ நிலையை அளிப்பதற்கென ஸிம்ஹாஸனம் அளிக்கவிரும்பி, ஸிம்ஹத்தை எப்போதும் அருகில் கொண்டுள்ளாயோ?



वने जातः सिंहः पुनरपि दीवासनिरतः स्वसाभ्यं यत्र स्यात्सततवसतिं तत्परिसरे ।
चिकीर्षन्भ्रान्त्या किं तव पदवनेजे नतमनो गुहावासे दृष्ट्वा वसतिमकरोत्तत्परिसरे ॥५२॥

வனே ஜாத: ஸிம்'ஹ: புனரபி தீ3வாஸநிரத: ஸ்வஸாப்4யம்' யத்ர ஸ்யாத்ஸததவஸதிம்' தத்பரிஸரே |
சிகீர்ஷன்ப்4ராந்த்யா கிம்' தப3 பத3வனேஜே நதமனோ கு3ஹாவாஸே த்3ரு'ஷ்ட்வா வஸதிமகரோத்தத்பரிஸரே ||52||


சிங்கம் காட்டில் பிறந்தது, குகையில் வசிக்க ஆர்வமிக்கது. தனக்கேற்ற நிரந்தரமான தூங்குமிடத்தைத்தன் அருகே கொள்ள விரும்பி தடுமாற்றத்தால் உன் திருவடியும் "வனத்தில் தோன்றியது, (வனம்-நீர். அதில் தோன்றிய தாமரை) வணங்கியவரின் மனமாகிய குகையில் வசிப்பதெனக்கண்டு அதனருகில் தன் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டதோ?

नाथस्यापि ममानिवेद्य हरिणः सेवां कथं प्रातनोत् वाग्देव्याश्चरणाब्जयोरिति रुषा सारङ्गबालं भृशम् ।
कृत्वा शीघ्रपलायनोत्सवपरं सेवां करोत्यादरात्-ऋश्येशः स्वयमित्यवैमि करुणावारान्निधे शारदे ॥५३॥

நாத2ஸ்யாபி மமாநிவேத்3ய ஹரிண: ஸேவாம்' கத2ம்' ப்ராதனோத் வாக்3தே3வ்யாஶ்சரணாப்3ஜயோரிதி ருஷா ஸாரங்க3பா3லம்' ப்4ரு'ஶம் |
க்ரு'த்வா ஶீக்4ரபலாயனோத்ஸவபரம்' ஸேவாம்' கரோத்யாத3ராத்-ரு'ஶ்யேஶ: ஸ்வயமித்யவைமி கருணாவாராந்நிதே4 ஶாரதே3 ||53||

கருணைக்கடலே! சாரதையே! "தலைவனான தன்னிடம் தெரிவிக்காமல் வாக்தேவியின் சரணகமலங்களின் ஸேவையை மான் எவ்வாறு செய்தது" என்று கோபித்து மான்குட்டியை சீக்கிரமாக விரட்டி ஓடச் செய்து பின் மான்களின் (காட்டின்) தலைவனான சிங்கம் ஆர்வத்துடன் ஸேவை செய்கிறதென எண்ணுகிறேன். (சிங்கவாகனக் காட்சி).


(தொடரும் ...)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஶ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### இரண்டாவது ஸர்கம்

பிரும்மா கூறியது: பகவானே! புலஸ்த்தியருடைய குலத்தில் தோன்றியுள்ள பலசாலியான ராவணன் என்ற பெயர் படைத்தவன், ராட்சஸர்களுக்குத் தலைவனாகி, கொடுக்கப்பட்ட வரத்தால் ஆணவம் கொண்டு, மூன்று உலக மக்களையும் மன்னர்களையும் மற்றெல்லா உலகங்களையும் துன்புறுத்திவருகிறான். ஆனால், உலக மக்களின் நல்வாழ்வை கருத்தில் கொண்டு, 'மனிதனால் அவனுக்குச் சாவு ஏற்படும் என்று என்னால் வரையறுக்கப்பட்டது. ஆதலால் ஹே பிரபூ! தாங்கள் எல்லோரையும் ரக்ஷிக்கும் பொருட்டு கருணை கூர்ந்து மானுடராகப் பிறந்து தேவர்களின் எதிரியான அவனைக் கொல்ல வேண்டும்' என்று பக்தியுடன் அனைவரு சார்பாக பகவானிடம் வேண்டி கொண்டு நின்றார்.

ஶ்ரீபகவானின் கூற்று: முன்பு ஒரு முறை கசியபருடைய தவத்தினால் மகிழ்ச்சியடைந்த நான் அவருக்கு ஒரு வரம் கொடுத்துள்ளேன். 'தாங்கள் எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும்' என்ற அவருடைய வேண்டுகோளை நான் ஏற்றுக் கொண்டேன். அவர், இப்போது பூவுலகில் தசரதனாகத் தோன்றியுள்ளார். என்னை நான்கு கூறுகளாகப் பிரித்துக் கொண்டு, ஒரு நல்ல நாளில், அவருடைய புதல்வனாகக் கௌஸல்யையிடமிருந்தும், மற்ற இரு அரசிகளிடமிருந்தும் தனித்தனியே பிறப்பேன். அப்போது, யோகமாயையும் ஜனகருடைய மாளிகையில் சீதை என்ற பெயருடன் தோன்றுவாள். அவளுடன் கூடச் சேர்ந்து நீங்கள் கோரியுள்ள எல்லாவற்றையும் நிறைவேற்றித் தருகிறேன்' என்று சொல்லிவிட்டு புன்னகையுடன் மகாவிஷ்ணு மறைந்தார். உடனே. பிரும்மா தேவர்களைப் பார்த்துக் கூறினார்.

தேவர்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி. ஶ்ரீ மகாவிஷ்ணுவானவர் ரகுவினுடைய குலத்தில் மனித வடிவம் ஏற்று அவதரிக்கப் போகிறார். ராவண வதத்துக்கு அனுகூலமாக இருக்கும் வகையில், நீங்கள் எல்லோரும் வானரர்களிடம் தெய்வாம்சமாக உங்களை பிறப்பித்துக் கொள்ளுங்கள். பூவுலகில் ஶ்ரீநாராயணன் இருக்கும் வரையில் அவருக்கு உதவியாக இருங்கள். இவ்வாறு தேவர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, பூமிதேவிக்கும் ஆறுதல் கூறி, தன் கவலை நீங்கியவராக நிம்மதியுடன் தன் இருப்பிடத்துக்குப் பிரும்மா சென்றார்.

தேவர்கள் எல்லோரும், வானரர்களுக்குப் பிறந்து, மகாவிஷ்ணுவுக்கு உதவி செய்வதற்காகப் பல இடங்களிலும் (மண்ணுலகில்) வசித்து வந்தார்கள். மலைச் சிகரங்களையும் மாபெரும் மரங்களையும் கொண்டு போர் புரியும் பேராற்றல் படைத்த அவர்கள், பகவான் நாராயணனின் வரவை எதிர்பார்த்து தங்களுடைய பிறப்பின் பலனை நிறைவேற்ற ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

உமா-மகேசுவராகளுக்கிடையே நிகழ்ந்த உரையாடலான ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம் பால காண்டத்தில் இரண்டாவது ஸர்கம் முற்றிற்று.

**மூன்றாவது ஸர்கம்**

ஸ்ரீமகாதேவர் கூறியது : ஹி உமே ! எல்லா உலகங்களிலும் புகழ்பெற்ற வீரரும் அயோத்தியின் மன்னரும், சத்தியத்தையே கடைப்பிடிப்பவரும் செல்வச் செழிப்புற்றவருமான ராஜா தசரதன் பிள்ளைப்பேறு இல்லை என்ற துயரத்தால் வாட்டமுற்று, ஒரு சந்தர்ப்பத்தில், தன் குலகுருவான வசிஷ்டரை அணுகி நமஸ்கரித்து கீழ்கண்டவற்றை மனம் வருந்தி சொன்னார்.

'சுவாமி! சகல விதமான நற்குணங்களும் பொருந்திய புதல்வர்கள் எனக்கு எப்படி உண்டாவார்கள்? மகப்பேறு இல்லாத எனக்கு, மிக்க வசதிகளோடு கூடிய இந்த ஆட்சி கூட மிகப்பெரிய துன்பத்தையே தருகிறது. என்னால் ஒரு நாள் கூட நிம்மதியாக இருக்க முடியாமல் மகப்பேறு அற்றவனாக தவிக்கிறேன். எனக்கு தாங்கள் தான் ஒரு நல்ல வழியை காட்ட வேண்டும்'

அதைக் கேட்டதும், 'லோகபாலகர்களைப் போன்று பராக்கிரமசாலிகளான நான்கு புதல்வர்கள் உனக்கு மிகச் சீக்கிரம் உண்டாகப் போகிறார்கள். சாந்தா தேவியின் கணவரும் தவச் செல்வருமாகிய ரிஷ்யசிருங்கரை அழைத்து வந்து, எங்களுடன் கூட, விரைவில் புத்ர காமேஷ்டி என்னும் யாகத்தைச் செய்' என்று தசரத சக்கரவர்த்திக்கு வசிஷ்டர் ஆசி வழங்கினார்.

'அவ்விதமே செய்கிறேன்' என்று உற்சாகமாக பதில் கூறி விட்டு, ரிஷ்யசிருங்க முனிவரை வரவழைத்து, அமைச்சர்களுடன் கூடத் தூயவனாக இருந்து, மாசுகள் நீங்கப்பெற்ற முனிவர்களைக் கொண்டு வேள்விச் சடங்கினைத் தொடங்கினார். வேள்வி அக்னியில் சிரத்தையுடன் ஆஹுதிகொடுத்து வரும்போது, உருக்கிய தங்கத்துக்கு நிகரான ஒளிபொருந்திய அக்னி பகவான், பாயஸம் நிறைந்த தங்கப் பாத்திரத்தை ஏந்தியவாறு தோன்றி. பின்வருமாறு சொன்னார்.

(தொடரும்...)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://voiceofjagadguru.com

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |


ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்